கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 24 சனிக்கிழமை (06-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 71

அரசாங்கத்தை விமர்சித்து வரும்

## பத்திரிகைகளுக்கு எதிராக பிரேமா அரசு கடும் போக்கு

கொழும்பு, பெப் 6

அரசை விமர்சித்துவரும் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் எதிராக கடும் போக்கைக் கடைப்பிடிக்க பிரேமா அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன் ஒரு கட்டமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பத்திரிகைகள் உட்பட ஐந்து பிரதான பத்திரிகைகள் அரச அதிகாரிகளின் மிரட்டலுக்கு இலக்காகியிருக்கின்றன.

வருமானவரி, விற்பனை மொத்த வரி, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், மாநகர சபைக் கட்டணங்கள் ஆகியவற்றை உடனடியாகச் செலுத்தும்படியும்—

(1 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி தடுப்பு முகாமிலிருந்து 22 பேர் விடுதலையாகினர்

### எஞ்சிய 35 கைதிகளும் விரைவில் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 6

பலாலி இராணுவ முகாமில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 பேர் உட்பட 22 கைதிகள் நேற்று அங்கிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

பலாலி முகாமில் எஞ்சியிருப்பதாகக் கூறப்படும் 35 தமிழ்க் கைதிகளும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என அறியவருகிறது.

வட பகுதிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயத்திலும், தமிழகத்துக்கு அகதிகளாகப் படகுகளில் சென்று வந்த வேளை இடைவழியிலும் படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் 19 பேரே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுடன் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி வல்வெட்டித்துறைக் கடலில் வைத்து படையினரால் பிடிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட மூன்று மீனவர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி 19 பேரில் இருவர் கொழும்பில் வைத்து விடுவிக்கப்படுவதற்க்காக நேற்றே பலாலியில் இருந்து கொழும்புக்குக் கூட

(3 ஆம் பக்கம் பார்க்க)

### விடுவிக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 6

பலாலியில் இருந்து நேற்று விடுதலையான 22 பேரில் 20 பேரின் விவரங்கள் கிடைத்துள்ளன அவை வருமாறு:-

- சுப்பிரமணியம் குவீந்திரன் (வயது 23 — கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
- தமயாம்பிள்ளை ஞானசப்பிள்ளை (வயது 40 — முல்லைத்தீவு)
- துரைச்சாமி சந்திரலிங்கம் (வயது 42 திருகோணமலை)
- அருளானந்தசாமி இராமகிருஷ்ணன் (வயது 23 — வல்வெட்டித்துறை)
- தேவசகாயம் அருணாசலநாயகம் (வயது 22 — வவுனியா)
- கதிரவேலு தபேந்திரன் (வயது 22 — திருநெல்வேலி)
- சேவியா நெப்போலியன் பெர்னாண்டோ (வயது 42 — மாதகல்)
- பொன்னன் இராஜதுரை (வயது 39 — காரைநகர்)
- கனகரத்தினம் ஞானரத்தினம் (வயது 38 — வல்வெட்டித்துறை)
- கந்தசாமி ரவீந்திரன் (வயது 24 — கொட்டடி)
- ஐயாச்சாமி செல்லத்துரை (வயது 59 — மாங்குளம்)
- தங்கராசா ஜெயக்குமார் (வயது 25 — மானிப்பாய்)
- புஷ்பராசா (வயது 42 — பருத்தித்துறை)
- அப்புத்துரை (வயது 40 — கற்கோவளம்)
- வரதராஜா மகேந்திரராஜா (வயது 26 — குருநகர்)

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ நடவடிக்கை வவுனியாவில் நிறுத்தம்

கொழும்பு, பெப். 6

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதிப்பக்கமாக மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின்போது ஷெல், மோட்டார் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் பெருந்த எடுப்பில் நடத்தப்பட்டன என்பதும்—

நான்கு தமிழ்க் கிராமங்களை படையினர் ஆக்கிரமித்தனர் என்பதும் தெரிந்ததே.

இந்தக் கிராமங்களில் இப்போது புளொட் குழுவினர் நடமாடத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-3-6)

## முல்லைத்தீவு, மன்னாரில் ஊரடங்கு தொடர்கிறது

### வவுனியாவில் மட்டும் நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று சனிக்கிழமை காலை 6 மணிமுதல் நீக்கப்படுவதாக கூட்டுப்படைகள் கட்டளைப்பீடம் அறிவித்தது.

எனினும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து மறு அறிவித்தல் வரை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## தேர்தலை உத்தேசித்தே பிரேமா நடவடிக்கை!

### பி.பி.ஸி, ஆய்வுக் கண்ணோட்டம்

கொழும்பு, பெப். 6

தமது அரசுக்கு மாறான பத்திரிகைகளுக்கு எதிராகப் பிரேமதாஸா சதுரங்கக் காய்களை நகர்த்துகின்றார் என்றால், அதன் அர்த்தம் விரைவில் திடீர்த் தேர்தல் வரப் போகின்றது என்பதுதான் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

— இவ்வாறு பி. பி. ஸி தமிழோசையில் இடம்பெற்ற ஆய்வுக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தேர்தல் மாகாண சபைத் தேர்தலாக இருக்கலாம். அல்லது ஜனாதிபதித் தேர்தலாகவும் இருக்கலாம்.

எந்தத் தேர்தலாக இருந்தாலும் பத்திரிகைகள் எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையை உருவாக்குவதே ஜனாதிபதி பிரேமதாஸா தமக்கு எதிரான பத்திரிகைகளை நசுக்குவதற்கு எடுத்துவரும் திட்டமாகும் என்றும் பி. பி. ஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

[உ—எ]

## போதனா ஆஸ்பத்திரி பொது ஆஸ்பத்திரியாகுகிறது

போதனா வைத்தியசாலைகள் யாவும் பொது வைத்தியசாலைகளாக பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார மகளிர் விவகார அமைச்சின் உத்தரவுக்கு அமைய இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி யாழ். போதனா வைத்தியசாலை இனிமேல் யாழ். பொது வைத்தியசாலை எனப் பெயர் மாற்றப்பட இருக்கிறது.

(உ-15)

## வாகன அணி மூலம் உணவு: மேலும் தாமதமாகலாம்

யாழ்ப்பாணம், பெப். 6

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்களை எடுத்து வரும் விவகாரம் குறித்து, பலாலியில் நேற்று விரிவாக ஆராயப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பலாலி சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி, பலாலியில் யாழ். மாவட்ட தளபதி பிரிகேடியர் குலரத்னவுடன் பேச்சு நடத்தினார்.

வாகன அணி செல்லும் பாதை மற்றும் பாதையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுதல் ஆகியவை உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாகவும் —

வாகன அணி முதல் தடவையாக காங்கேசனுக்குச் செல்வதற்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் —

அது மேலும் தாமதமாகலாம் என்றும் பலாலி சென்று நேற்று மாலை அங்கிருந்து திரும்பிய — செஞ்சிலுவைச் சங்க சர்தேசக் குழு — அதிகாரி தெரிவித்தார்.

(உ 3-5)

தடைவிதித்தால்

## தமிழகம் மற்றொரு தமிழீழமாகமாறும்!

### பாட்டாளி ம. கட்சி எச்சரிக்கை

பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டால் தமிழ்நாடு மற்றொரு "தமிழீழம்" ஆக மாறும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் செயலாளர் பேராசிரியர் தீரன் முன்கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.

தமிழக மக்களை ஒடுக்க நினைத்தால் இலங்கையில் தமிழர்கள் போராடுவது போன்று தமிழகத்திலும் போராட்டம் வெடிக்கும் — என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-எ)

## நிவாரணப் பொருள்கள் 10 ஆம் திகதி விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 6

இடம்பெயர்ந்தோருக்குரிய— ஜனவரி மாத கடைசி இரு வாரங்களுக்கான — நிவாரணப் பொருள்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வழங்கப்படவிருக்கின்றன.

தற்சமயம் பருத்தித்துறையில் தரித்துள்ள 'குமணி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடிந்ததும் நிவாரணப் பொருள் விநியோகம் ஆரம்பமாகும் என்றும்—

நிவாரணம் பெறாதவர்களுக்கு அரிசி, மா, சீனி போன்றவை பங்கீட்டு அடிப்படையில் ப. நோ. கூ சங்கங்கள், வர்த்தகத் திணைக்கள கிளைகள் ஆகியன மூலம் தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகவும்—

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார். (உ-3)

## கண்கட்டிய நிலையில் தொடர்ந்து ஒன்பது மாதங்கள் கஷ்டமுற்றோம்

### பலாலியில் இருந்து வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், பெப் 6

ஒன்பது மாதங்கள் தொடர்ந்து கண் கட்டிய நிலையில் பலாலி சித்தி விநாயகர் பாடசாலையில் சிறை வைக்கப்பட்டிருந்தோம். ஆனையிறவு யுத்தம் நடந்த சமயம் தினமும் பல தடவைகள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டோம்.

— இவ்வாறு தமக்கு நேர்ந்த அனுபவத்தை விவரித்தார் நல்லூரைச் சேர்ந்த சிவசாமி சோதிநாதன். இவருக்கு வயது 28 ஆகும்.

பலாலியில் கடந்த 28 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

முழங்காவிலை சொந்த இடமாகக் கொண்ட — திருமணமான — மேற்படி இளைஞர் கடந்த 90 ஆம் ஆண்டு அக்டோபர் மாத நடுப்பகுதியில் இந்தியாவிலிருந்து படகில் வந்துகொண்டிருந்த சமயம் மன்னார் கடலில் வைத்துப் படையினரால் பிடிக்கப்பட்டார்.

மன்னாரில் பிடிபட்டேன்

தமக்கு நேர்ந்த அனுபவம் பற்றி அவர் மேலும் தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இரு சமூக விரோதிகளுக்கு நேற்று மரணதண்டனை

யாழ்ப்பாணம், பெப். 6

சமூக விரோதச் செயலில் ஈடுபட்ட இருவருக்கு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த ஐயாத்துரை மணிசரன் என்பவருக்கு சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் வைத்து, காலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி சாணம் பொறுக்கக் காட்டிற்குச் சென்ற 11 வயதுச் சிறுமியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக் கொலை செய்ததுடன் அச்சிறுமியின் நகைகளை அபகரித்த குற்றத்தில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தார்.

கடந்த அக்டோபர் நடுப்பகுதியில் இந்த இளைஞருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

சுழிபுரம் காளுவன் சந்தியிலும் நேற்றுக் காலை 7.50

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கலாமண்டபம் இன்று வைபவரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

இளங்கலைஞர் மன்றத்தினர், நல்லூர் சட்டநாதர் வீதியில் நிர்மாணித்துள்ள கலாமண்டபம் இன்று காலை ஒன்பது மணிக்கு வைபவரீதியாக கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும்.

கலா மண்டபத்தை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பார். அவரது தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் அதி வணக்கத் தோமஸ் சௌந்தரநாயகம், சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகள் வழங்குவர்.

பிரதம விருந்தினர்களாக அரச அதிபர் கா. மாணிக்கவாசகர், துணைவேந்தர் அ. துரைராஜா, கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக ஆணையாளர் பொ. பாலசிங்கம், திவ்விய ஜீவன சங்கத் தலைவர் எஸ். கனகரத்தினம், உதவி அரச அதிபர் ஆ. மகாதேவன், நாதன் ஆகியோர் பங்குபற்றுவர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா - இலங்கை கூட்டாக புலிகளுக்கு எதிராக நடவடிக்கை

### கார்த்திகேயன் கொழும்பில் இரகசியப் பேச்சு

சென்னை பெப் 6

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குறித்து புலனாய்வு நடத்தி வந்த விசேட புலனாய்வுப் பிரிவுத் தலைவர் டி. ஆர். கார்த்திகேயன் சமீபத்தில் கொழும்புக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலும் இலங்கையிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இலங்கை பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் அவர் பேச்சுகள் நடத்தினார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறியதாக செய்தி ஏஜன்ஸி ஒன்று நேற்று அறிவித்தது.

## ஓமந்தையில் காயமுற்ற அறுவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், பெப் 6

வவுனியா ஓமந்தையில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற பொம்பர் குண்டு வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சதானந்தன் ஸ்ரீலோலானந் (35 வயது), அர்ச்சுதன் சூரியகலா (24 வயது), மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த சாந்தமலர் (37 வயது), பத்மினி (38வயது), யோகேஸ்வரி (38 வயது), ஓமந்தையைச் சேர்ந்த சிவனந்தங்கம் (39 வயது) ஆகியோரே யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது இறந்த மூவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## மீட்பு நிதி நாளை செலுத்தலாம்

யாழ்ப்பாணம், பெப் 6

இதுவரை தமிழீழ மீட்பு நிதி செலுத்தாதோர் நாளை காலை 9.30 மணி முதல் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் வைத்து அதனைச் செலுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது.

(உ)

## கிழக்கு பல்கலையில் உடனடியாக மருத்துவபீடம்

கொழும்பு, பெப். 6

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிக்கும் பணி உடனடியாக ஆரம்பமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக மட்டக்களப்பு அரசு மருத்துவமனை போதனா வைத்தியசாலை ஆக தரமுயர்த்தப்படும் என்று மட்டக்களப்பு அரச அதிபர் திரு இ. மோனகுருசாமி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையை முன்னிட்டு உடனடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

7x7 பலாப்பலகை கண்ணாடி அலுமாரி, 6x3½ படிக்கும் மேசை, இல்லறைச் சாமான் போடும் பட்டறை, யானைச்சோடா வெற்றுப் போத்தல், சிறீ தனா யிவி ஸ்ரோர், அடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (24275)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24314)

### மணமகன் தேவை

கவர்ச்சியான, சீதனத்துடன், 35 வயதில் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் வீட்டுடன் பல பெண்கள் உண்டு. தரமான மணமகன்மார் தேவை. ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (24279)

கொழும்பில் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் 7இல் செவ்வாய் உடைய பட்டதாரி பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதக மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 493, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24294)

### மணமகள் தேவை

அலைமையில் தாரம் இழந்த 43 வயது, இந்து பொறியியல் பட்டதாரியை தனிப்பட்ட மணமகனாக ஏற்று, உடன் திருமணம் செய்து கனடாவுக்கு வரக்கூடிய படித்த மணமகள் சுயமாக 09-02-9 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இல. 494, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24316)

29 வயது, செவ்வாய்க் குற்றமற்ற அரசாங்க ஆசிரியருக்கும், 22 வயது ஆசிரிய சகோதரிக்கும் மாற்றாகவோ, தனியாகவோ பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (24292)

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஓடருக்கு சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை. நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (24282)

### தையல் பயிற்சி

கலபமான முறையில் தரமான எல்லாவித ஆடைகளும் வெட்டித் தைக்கும் முறை எம்பிறொய்டறி சிமோக்கிங் பல வகை விரும்பின், பூச் செய்தல், நிற்றிங், லேஸ் பின்னுதல், ஐசிங் மற்றும் பலவித கைவேலைகளுக்கும் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் (5803)

### இலவச திருமண சேவை

30வயது, பூசம், செவ்வாய் 4, சட்டத்தரணியாக கொழும்பில் கடமைபுரிபவருக்கு ஏற்ற மணமகன் தேவை. வெளிநாடும் விண்ணப்பிக்கலாம். மணமக்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, நாச்சிமார்கோவிலடி. (24272)

35 வயது, செவ்வாய் 8 ஆசிரியைக்கும், 36 வயது ஆசிரியருக்கும் அதே தரத்தில் மாற்றுச் சம்பந்தம் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (24274)

### தவறிவிட்டது

குணரெத்தினம் ஐஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை (446014722 V) 23-12-1992 இல் ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஓட்டுமடம் சந்தி, கணேஸ் கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும். (24303)

### பரீட்சை (ஆண்டு 4, 5)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 4 ஆண்டு 5 வகுப்புகளுக்கு 07-02-93 மு.ப. 8, மு.ப. 1 நேரங்களில் நடைபெறும். பதிவுசெய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24302)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 204 மானிப்பாய் றோட், ஓட்டுமடம் யாழ்ப்பாணம். (5779)

### TUITION

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை அனைத்துப் பாடங்களிலும் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெறக் கற்பிக்கப்படும். புலமைப்பரிசில் பரீட்சை, கல்லூரி அனுமதிப் பரீட்சைகளில் மிக விசேட முறையில் கற்பிக்கப்படும். ஆரம்பம்: 06-02-1993 (தைப்பூசம்) ஆசிரியர் ஸ்ரீசக்திதாசன், 359/3, கோவில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்திற்கு அருகில்) (24283)

### பொதுசன உதவிப் பணம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான அக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்தப் பகுதி கிராமசேவை அலுவலர்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-100)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

## ★ செல்வன் தீபன் ★

(06 02 — 1993)

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த சுந்தர் - ராமநாதன் - இரதிபாணிதேவி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் தீபன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று கனடாவில் தனது அம்மா, அப்பாவுடன் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வண்டவாள் வசிக்கும் சித்தப்பா, சித்தி, சசி, நாச்சி சகோதரர்கள், "செல்வராசா அவனியூ" அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கில் வசிக்கும் அம்மம்மா, ஆசை மாமா, ஆசை மாமி, மைத்துனர்கள் சுதா, கரன், மைத்துனி ஜனினி மற்றும் பெரியமாமா குடும்பத்தினர், சின்னமாமா குடும்பத்தினர், கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த அப்பம்மா ஜெயலட்சுமி, திருமதி தியாகராசா குடும்பத்தினர் ஆகியோர் நல்லைக்கந்தன் அருள்பெற்று சகல கலைகளும் கொண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

— செ. சிவலிங்கம்.

(சி-4345)

## வெளிநாட்டு மொழிகள் பயிற்சிக்கான வகுப்புகள்

பிரெஞ்ச், ஜேர்மன், ஜப்பான், ரஷ்ஷிய மொழிகள்

ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.

ஆங்கிலம்: O/L, A/L மற்றும் மேல் வகுப்புக்கான பிரிவுகளுக்கும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:-

ரி. எம். எஸ்.
162 A, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்)
யாழ்ப்பாணம்

(24815)

## அழைத்து மகிழுங்கள்!

எளிமை! இனிமை!! திறமை!!!

## ★ பாடு நிலா ★

(மெல்லிசை நிகழ்ச்சி)

பல தரமான இசைக்கலைஞர்களின் உருவாக்கமே!

"பாடு நிலா"

விஷேச சலுகைகளுடன் நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள்

தொடர்பு:

யோ. மகேந்திரா (சிற்பி),
5 (17), கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(24262)

## நியூட்டன் அக்கடமி

(கோண்டாவில்)

ஆண்டு 4 தொடக்கம் 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

அனுமதிக்கு முந்துங்கள் !!

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு. S. கருணாகரன் |
| விஞ்ஞானம் | : | திரு: இரா. அருட்செல்வம் |
| தமிழ் | : | பிரபல ஆசிரியர் |
| சமூகக்கல்வி | : | திரு. கணேஷ் |
| ஆங்கிலம் | : | திரு. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | : | திரு. ஸ்ரீ |

- ★ கிழமையில் 6 கணித வகுப்புகள்
- ★ மாதாந்த பரீட்சைகள்
- ★ உயர்ந்த எதிர்காலத்திற்கு உங்கள் சிறார்களை எம்மிடம் ஒப்படையுங்கள்

**O/L Day Class 04-02-1993 இல்**

ஆரம்பமாகிவிட்டன.

காலை 8 மணி

(கிழமையில் 4 நாட்கள் வகுப்புகள் நடைபெறும்)

(சி-4106

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

**92 A/L** பரீட்சை சித்தியடையாத மாணவர்களுக்கான

**துரித மீட்டல்** Sat., Sun. Classes

ஆரம்பம்: 07 - 02 - 1993

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — | திரு கலாகரன் | 11 00—12-00 |
| வர்த்தகம் | — | திரு தேவா | |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் | 9-00 10-00 |
| அளவையியல் | — | திரு விக்கி | 10-00 11 00 |
| தமிழ் | — | திரு. குழந்தை | 7-00—8-00 |
| இந்து நாகரிகம் / இந்துசமயம் | — | திரு காரை-சுந்தரம்பிள்ளை | 9 00 10-00 |
| புவியியல் | — | திரு குணராசா | 0-00—11-00 |
| அரசியல் | — | திரு ஜெயகாந்தன் | 8 00—9-00 |
| வரலாறு | | திரு சிறீதரன் | 11 00—12-00 |
| | | | 2-00—3-00 |

கணக்கியல் — திரு. S K. பிரபாகரன் 2:00 — 5-00

200 அனுமதிகளுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும். அனுமதிக்கு முந்துங்கள்.

(சி-4220)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

## புத்தகம் கட்டுபவர் தரம் 11 பதவி

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து புத்தகம் கட்டுபவர் தரம் 11 பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 - 02 - 26 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சம்பளத் திட்டம்:**

ரூபா 1865 — 11x40 - 230

(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் 15% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.)

**கல்வித் தகைமை:**

எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தவராக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் 05 ஆண்டுகள் புத்தகம் கட்டுதலில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏழாம் வகுப்பு சித்தியுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சேவையாற்றியிருப்பதுடன் புத்தகம் கட்டுதலில் அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது:**

விண்ணப்ப முடிவு திகதியில் 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**

தொழிற்தேர்வும் நேர்முகப் பரீட்சையும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 x 10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். இவ் விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கட்டுப்பாடாக அமையாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993 - 01 - 30

(சி-4338)

கணபதி துணை

திருநெல்வேலி

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

## ஆலய வருடாந்த மஹோற்சவம் - 1993

பாதார விந்தம் பணிவார் தமக்கருளின் பாதமலர்
ஆதாரம் நீயன்றி வேறெவரோ அனைவார் கூடின்
போதா செழுநகரைப் பிறவித்துயரைப் போக்குகின்ற
வேதா ரஸியனே விறல் வீரகத்தி விநாயகனே

ஊரிலே உறவில்லை உதவிகள் செய்து
அஞ்சல் என்பார் ஒருவர் இல்லை
நீரிலே நின்று அலையும் துரும்பு போல்
நெஞ்சம் வைத்துத் தியங்குகின்றனே

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 93 - 02 - 06 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 16 தினங்கள் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. எனவே அடியார்கள் கொடியேற்றம் முதல் பதினாறு தினங்களும் ஆசாரசீலராய் வருகை தந்து வணங்கி எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்வீர்களாக.

### ★ விசேட உற்சவ தினங்கள் ★

| | | |
|---|---|---|
| 15 - 02 - 93 | திங்கள் | மஞ்சம் |
| 19 - 02 - 93 | வெள்ளி | சப்பறம் |
| 20 - 02 - 93 | சனி | தேர் |
| 21 - 02 - 93 | ஞாயிறு | தீர்த்தம் |

பிரசுர அன்பளிப்பு

"ஆறுமுகம் சிற்பாலயம்"
காளிகோயிலடி, திருநெல்வேலி.

(சி/4347)

## நூல் வெளியீட்டு விழா

"தமிழர் வரலாறும் இலங்கை இடம் பெயர் ஆய்வும்"

உடுப்பிட்டி
திரு கதிர் தணிகாசலம்

எழுதிய நூல் வெளியீட்டு விழா 07 - 02 - 93 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். நல்லை ஆதீனக் குருமணி ஆசி வழங்க, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் தலைமை வகிக்கிறார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும், கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்களும் கருத்துரை வழங்க, சிவநெறிக் காவலர், திரு மு. கனகராசா ஜே. பி. அவர்களும், திரு க. சோமசேகரம் அவர்களும், நூலின் பிரதிகளைப் பெற்றுச் சிறப்பிக்கிறார்கள்.

- விழாக் குழுவினர்.

(24319)

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

"ராக பாவம்"

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்;- 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச் சீட்டு:-

நாள் ஒன்றுக்கு: 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(சி-3920)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 20 - 09 — 1970

தமிழ் மண்ணின் மடியில்: 06 — 02 — 1987

### பரமசாமி உருத்திரசிங்கம்

(வீரவேங்கை கபில்)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமசாமி உருத்திரசிங்கம் கட்டுவனில் இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்ததற்கு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, தம்பி, தங்கைமார்
மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார்,
சித்திமார், மற்றும் உற்றார், உறவினர்.

இல; 164, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(24321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இலக்கை மறந்து ஏமாறலாகாது

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு அவசியம். இவ்வாறு தமது வழமையான பல்லவியை, வியாழனன்று நிகழ்த்திய சுதந்திர தினப் பேச்சிலும் ஜனாதிபதி பிரேமதாசா மீட்டிருக்கிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தயாரித்துள்ள திட்டத்தை மனதில் வைத்துக் கொண்டே அவர் இவ்வாறு கூறிவருகிறார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெரிவுக் குழுவின் முடிவையே எதிர்பார்த்திருப்பதாக அவர் அடிக்கடி மேடைகளில் கூறிவருவது அதனையே ஊர்ஜிதமாக்குகிறது.

அப்படியாயின், தெரிவுக் குழுவின் திட்டம் என்ன? அது நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் அடங்கியிருக்கக் கூடியது என்ன?

சமஷ்டி என்ற பெயரில், கடந்த ஐந்து வருடங்களாகச் சட்டரீதியாக இணைந்திருக்கும் வடக்கு - கிழக்கைத் துண்டிக்கும் சதித் திட்டமே அது. இதனை மூத்த அரசியல்வாதியும், அனுபவசாலியும், அமைச்சருமான திரு தொண்டமான், தலைவர் பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

திரு சிறிநிவாசன் தெரிவுக் குழுவுக்கு சில யோசனைகளை முன் வைத்தார். இவற்றில் எமக்குச் சாதகமான ஒரு கருத்தையுமே என்னால் காண முடியவில்லை. ஐந்து வருட காலமாக நிலைபெற்றிருந்த வடக்கு - கிழக்கைத் துண்டிக்க எடுத்த சூழ்ச்சிக்குச் சமஷ்டி என்ற போர்வை கொடுக்கப்பட்டது —

அரசியல் சாதுரியமற்ற இக் கருத்துகளுக்கு தென்னிலங்கையில் பெரும் வரவேற்பிருந்தது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அவற்றை முற்றாக ஒதுக்கித் தள்ளியது — என்று திரு தொண்டமான் விவரித்திருக்கிறார்.

மலையகத் தமிழர்களின் தலைவரால், அரசியல் சாதுரியமும், தெளிவும் உறுதியும் உள்ள ஒரு மூத்த தலைவரால் ஒதுக்கப்பட்ட திட்டத்தைத் தான் தெரிவுக்குழு தனது தீர்வாக முன் வைக்கப்போகிறது! அதனை வடக்கு - கிழக்குத் தமிழர்களோ, விடுதலைப் புலிகளோ ஏற்கமாட்டார்கள் என்பது அரசாங்கத்துக்குத் திட்டவட்டமாகத் தெரியும். கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் அதனை நிராகரித்துவிட்டனவே!

தமிழருக்குச் சுயாட்சி வழங்காத எந்தத் தீர்வாலும் சமாதான நிலையை ஒருபோதும் உருவாக்க இயலாது என்று அமைச்சர் தொண்டமான் சுட்டிக்காட்டியதை தெரிவுக்குழு கவனத்தில் எடுக்கவில்லை. தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் எந்தத் திட்டத்தையும் பரிசீலனை செய்வதற்கு சிங்களத் தலைவர்கள் தயாரில்லை என்பதே உண்மை.

அதனால் தான் தமிழர்களுக்கு ஒவ்வாத தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை அவர்கள் மீது திணிக்க அரசு தயாராகிறது. அதற்கேற்ற விதத்தில் தமிழர்களை இராணுவ ரீதியாகப் பலவீனமுறச் செய்வதற்கான ஏற்பாடுகளை அது இப்போது செய்து வருகிறது. புதிதாக விமானங்கள், கப்பல்கள், பீரங்கிகள் என்று படையினர் கேட்கும் நவீன இராணுவத் தளபாடங்களை அரசு வாங்கிக் குவிப்பது அந்த நோக்கத்துடனேயே ஆகும்.

இராணுவத் தீர்வுக்குப் பக்கபலமாகத்தான் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பன விதிக்கப்பட்டுள்ளன. இதனைத் தமிழர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். சமஷ்டி வருகிறது என்று ஏமாந்துவிடக் கூடாது. சுயநிர்ணயம், சுயாட்சி உரிமை என்ற இலக்கை மறந்துவிடக் கூடாது. தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வைக் கொழும்பு அரசு முன்வைத்துவிட்டதாக உலகமும் ஏமாந்துவிடக்கூடாது. அமைச்சர் தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் அதனையே தெளிவாகக் கூறுகிறது.

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், பெப் 6

குருபரபிட்டி சன்மார்க்க சபையின் சன்மார்க்க நுண்கலை மன்றம் நடத்தும் மாதாந்த கருத்தரங்குத் தொடர் - 2 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கலாகேசரி ஆ. தம்பித்துரை ''இந்திய மரபில் ஓவியக்கலை'' எனும் பொருளிலும் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு செ. கிருஷ்ணராசா ''இந்திய மரபில் சிற்பக் கட்டிடக் கலை'' எனும் பொருளிலும் கருத்துரை வழங்குவார்கள்.

o o o

யாழ்ப்பாணம், பெப் 6

அறவழிப் போராட்டக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள விவசாய அறுவடை விழா நாளை முற்பகல் 9-30 மணிக்கு நாவற்குழி மறவன் புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெறும். (க 5)

o o o

யாழ்ப்பாணம், பெப். 6

மலேரியா பற்றிய விரிவுரை ஒன்றை யாழ்ப்பாண மலேரியா எதிர்ப்பு இயக்கத்தின் பிராந்திய மருத்துவ அதிகாரி டாக்டர் கே. எஸ் சிவகுரு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் வண். மேற்கு வைத்திய நிலையத்தில் நிகழ்த்துவார்.

வட இலங்கை மருத்துவ கல்லூரியால் இச் சொற்பொழிவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வண்ணை வைத்தீஸ்வர மடம் ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பல்வேறு பாடசாலைகளில் நடைபெறும். (க)

o o o

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசப் ஆண்டகை நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் வரவேற்கப்படுவார்.

வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஆலய பங்குத் தந்தை அருட்திரு: தேசராசா தலைமை வகிப்பார். (க)

o o o

தென்மராட்சி, பெப் 6

பகவான் சத்திய சாயிபாபா சேவா நிலைய சாவகச்சேரிக் கிளையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளை தபால் கந்தோர் வீதியில் உள்ள பகவான் இல்லத்தில் நடைபெறும். (உ-117)

o o o

தென்மராட்சி, பெப் 6

யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் எதிர் நோக்கும் நிதி நெருக்கடி தொடர்பான மகாநாடு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் ஏற்பாட்டில் நாளை காலை 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடத்தப்படும்.

இம்மகாநாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்குபற்றுவர். (உ-117)

# இன்றைய நிகழ்ச்சிகள்

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத வேதாந்த மடத்தின் மாதாந்த தொடர் சொற்பொழிவில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம், ''தமிழ் மந்திரம்'' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். இளம் சொற்பொழிவாளர் ச. திவாகரனின் சொற்பொழிவும் இடம்பெறும். திருமந்திர முற்றோதல் நிகழ்ச்சி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து தினமும் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை திருமந்திர முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (உ)

o o o

யாழ்ப்பாணம், பெப் 6

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய திப இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி சிவப்பிரியா வைரமுத்துவின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (உ-15)

o o o

நவாலி, பெப். 6

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் பௌர்ணமி கலை விழா இன்று மாலை நிலைய வெள்ளி விழா மண்டபத்தில் நடைபெறும். (உ-100)

o o o

யாழ்ப்பாணம், பெப் 6

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும். (உ)

o o o

இன்று தைப்பூச நாளில் மாலை 4 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு அருகில், கஸ்தூரியார் வீதி, 516 ஆம் இலக்கக் கட்டடத்தில் அமைந்துள்ள மெய்கண்ட தேவர் ஆதீனம் — சைவசித்தாந்த உயர் நிறுவன அலுவலகத்தை சித்தாந்த மணி மு. திருஞானசம்பந்தபிள்ளை திறந்து வைப்பார். திரு. ச. வேலாயுதபிள்ளை கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ)

o o o

செம்பியன் பற்று பிராந்திய இக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 9.30 மணியளவில் செம்பியன்பற்று தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறும். (உ-145)

o o o

வண்ணார்பண்ணை, பெப் 6 கட்டைவேலி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கிளை முகாமையாளர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8 மணியளவில் சங்க அலுவலகத்தில் நடைபெறும். (உ 162)

o o o

யாழ்ப்பாணம், பெப். 6

கோப்பாய் சைன் கல்வியகம் ஏற்பாடு செய்துள்ள மனையியல் பொருள்காட்சி இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் செல்வி சின்னப்பு பிரதம விருந்தினராகவும், தனியார் கல்வி நிலைய யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு. க அன்னலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார். (உ-72)

o o o

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் அறிவியலரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்

திரு. அ. குமாரவேல் வலயின் சமகாலப் போக்கு பற்றியும், டாக்டர் சே. ஆனந்தராசா உயர் இரத்த அழுத்தம் பற்றியும் உரை நிகழ்த்துவார்கள். (க)

o o o

யாழ்ப்பாணம், பெப். 6

தமிழ்மூலக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தமிழ்மூலக் கல்விக்கழக அலுவலகத்தில் நடைபெறும். (உ)

o o o

யாழ் பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகு நடத்தும் கிராம அலுவலர்கள் பயிற்சி நெறியின் ஆரம்ப விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 10மணி வரை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் (உ-143)

## ஆஸ்பத்திரி தூதுக்குழு திரும்பியது

கொழும்பு சென்றிருந்த யாழ். ஆஸ்பத்திரியின் உயர்மட்டத் தூதுக்குழு நேற்று யாழ். திரும்பியது.

ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தலைமையில் சென்ற இவர் குழு, கப்பல் மூலம் வந்து பலாலியில் மூன்று நாட்கள் தங்கிய பின், ''குமண'' கப்பல் மூலம் இருந்து பருத்தித்துறை வந்தடைந்தது. (உ-15)

## 'ரெஸப' ஆங்கில நெறி

ஆசிரிய ஆலோசகர், பாடசாலைகளில் இருந்து விலகியோருக்கான 'ரெஸப' ஆங்கில நெறி வகுப்புகள் தொடங்கியுள்ளன.

கடந்த வருடம் க.பொ.த. தேர்வுக்குத் தோற்றத் தவறியவர்கள் இன்றும், நாளையும் பிற்பகல் 2 மணியளவில் பலாலி ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்து, குறித்த கற்கை நெறியில் சேர்ந்து கொள்ளலாம் என மேற்படி நெறியின் மாநில இணைப்பாளர் தெரிவிக்கிறார். (க)

## ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினர் ஏற்பாட்டில் இன்றும், நாளையும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருந்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ''திரிசங்கு சொர்க்கம்'' நாடகம் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## உழவர் பெருவிழா

யாழ்ப்பாணம், பெப். 6

சுன்னாகம் கந்தரோடை அருளமிகு வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் இன்று தைப்பூசத் திருவிழாவுடன் உழவர் பெருவிழாவும் நடைபெறும்.

தொழிலதிபர் கலாநிதி க. கனகராசா, யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப் 6

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 6

கோப்பாய் கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம், கோப்பாய் ஆஸ்பத்திரியடிச் சந்தியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

★ சென் மேரிஸ் ''ஏ'' அணி எதிர் சென். றோக் அணி

★ யங் றோயல் ''ஏ'' அணி எதி ஸ்ரீ முருகன் ''ஏ'' அணி (உ)

## இரு சமூக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் மற்றொருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது

தொல்புரம் பத்தானைக் கேணியடியில் வாழ்ந்துவந்த — காரைநகரைச் சேர்ந்த — மூன்று பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து பொன்னுத்துரை (வயது 46 என்பவருக்கே அங்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மேற்படி நபரின் மனைவி வெளிநாட்டில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது

இவர் எட்டு வயதுச் சிறுமி ஒருத்தியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-28-117)

## கலாமண்டபம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் சோ. பத்மநாதன், கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றுவர்.

இன்று மாலை 3 மணிமுதல் இயலிசை வாரிதி ந. வீரமணி ஐயர் தலைமையில் நாதஸ்வரக் கச்சேரி, வயலின் இசை, இன்னிசைக் கச்சேரி நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக முன்னாள் ஆணையாளர் [illegible] கலந்துகொள்வார். (அ)

# பலாலி தடுப்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிச் செல்லப்பட்டனர் என்று அறியவந்தது

அங்கிருந்த ஒருவர் முஸ்லிம், மற்றைய நபர் மானிப்பாயைச் சேர்ந்தவர். அவரின் பெற்றோர்கள் கொழும்பில் இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதால், அவர் அங்கு கூட்டிச் செல்லப்பட்டார்.

எஞ்சிய 17 பேரும் மற்றும் மூன்று மீனவர்களும் பலாலியில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. சுவங் கோவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறையில் பொருள்கள இறக்கிக் கொண்டிருந்த 'குமண' கப்பல் நேற்று மாலை காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து விடுதலையானவர்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்குத் திரும்பியது

விடுதலையானோரில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பருத்தித்துறையில் வைத்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் ஏனையோர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களில் மொத்தம் 135 பேர் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்றும் —

அவர்களில் 81 பேர் கடந்த வருடம் களுத்துறைச் சிறைக்கு இடம் மாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

எஞ்சிய 54 பேரில், 19பேர் நேற்று விடுதலையானர் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மற்றைய 35 பேரும் கட்டம் கட்டமாக புத்தாண்டுக்கு முன் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்

நேற்று பலாலியில் கைதிகள் விடுதலை சம்பந்தமான நிகழ்ச்சியில் உரையாற்றிய போது இராணுவ அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-15)

## கண்கட்டிய ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்ததாவது :-

ஆறு இந்தியப் படகோட்டிகளுடனும் நான்கு முஸ்லிம்களுடனும் இந்தியாவிலிருந்து படகில் வந்துகொண்டிருந்த சமயம் மன்னாரில் கடலில் வைத்து படையினரிடம் அகப்பட்டேன்

மன்னாரில் இருந்து நாம் காரைநகர் கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டோம். 13 நாட்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பின் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டோம் என்னுடன் வந்த முஸ்லிம் இளைஞர்களும், இந்தியப் படகோட்டிகளும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

பலாலிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் வேறு 92 பேருடன் நானும் சேர்க்கப்பட்டு அங்கு சிறை வைக்கப்பட்டேன்,

தொடர்ந்து சுமார் 9மாதங்கள் இரவிலும் பகலிலும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் நாம் அனைவரும் அங்கு அடைக்கப்பட்டிருந்தோம.

காலையில் முகம் கழுவுவதற்காக மட்டும் சில நிமிட நேரத்துக்கு எமது கண்கட்டுகள் அகற்றப்படும். பின் மீண்டும் கட்டப்படும் ஆனையிறவு யுத்தம் நடந்த வேளை தினமும் மூன்று வேளை படையினர் கண்டபடி எம்மைத் தாக்கினர்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் எம்மைப் பார்வையிட முதல் முதலாக வருகை தந்த நாள் வரை இந்நிலையே தொடர்ந்தது.

### குடும்பஸ்தர் மரணம்

எம்முடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் கடலில் பிடிக்கப்பட்டவர்களே. அவர்களில் குடும்பஸ்தர்களும், இளைஞர்களும் அடங்கியுள்ளனர். சிலர் நோய் வாய்ப்பட்டிருந்தனர். கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு எம்முடன் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் தாளையடியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடும் தொய்வு நோய் காரணமாகக் கடந்த நவம்பர் மாதத்தில் உயிரிழந்தார். அவரது சடலம் அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டதாக அங்கு அறிய முடிந்தது — இவ்வாறு அவர் சொன்னார். (அ-5)

## இருவர் மரணம்

வீதி விபத்தில் சிக்கி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் நேற்று அங்கு மரணமாயினர்

கடந்த மாதம் 21ஆம் திகதி அரியாலை கண்டி வீதியில் இடம்பெற்ற விபத்தில் தலையில் படுகாயமடைந்த அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த நாகமணி நடராசா (32 வயது) மற்றும் கடந்த மாதம் 3 ஆம் திகதி நெல்லியடி பஸ்நிலையத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த வதிரியைச் சேர்ந்த எஸ். இராமசாமிப்பிள்ளை (60 வயது) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்

## விடுவிக்கப்பட்டோர்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

o சிவசாமி சோதிநாதன் (வயது 27 — இணுவைக் கடவை)

o கொழும்பைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர்

விடுதலையான — வல்வெட்டித்துறையைச் சேர்ந்த — மூன்று மீனவர்களின் விவரம் வருமாறு:-

o பொன்னுத்துரை புவனேந்திரம் (வயது 24)

o பரமானந்தராசா ராதா (வயது 27)

o கனகு துரைசிந்துரை (வயது 35)

## சனி தோறும் திருப்பலி

யாழ்ப்பாணம், பெப் 6

நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த கிழக்கு அரியாலை அன்னைவேளாங்கண்ணி யாத்திரைத் தலத்தில் இன்று முதல் மாதத்தின் ஒவ்வொரு முதற் சனிக்கிழமை தினமும் மாலை 4-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என பங்குத் தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தெரிவித்துள்ளார். (க)

## காப்புறுதி தலைவராக சண்முகலிங்கம்

கொழும்பு, பெப் 6

திறைசேரியின் பிரதிச் செயலாளரான திரு கே. சண்முகலிங்கம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-எ)

## தவில் கலைஞருக்கு பாராட்டு

உடுப்பிட்டியைச் சேர்ந்த தவில் வித்துவான் திரு சண்முகவடிவேல் ஜெயநாதனுக்கு 'கான சாகரம்' என்னும் சிறப்புப் பட்டமும் தங்கப் பதக்கமும் அண்மையில் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை தும்பளை, கம்புருவளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் சார்பில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ வ. வே. நியானந்த ராஜக் குருக்கள் மேற்படி பட்டத்தையும், பதக்கத்தையும் வழங்கிக் கௌரவித்தார். (ஓ-5)


# திருமஞ்சத் திருவிழா

சரித்திரப் பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச சித்திரத் திருமஞ்சத் திருவிழா இன்று (06-02-1993) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். மாலை 5-00 மணிக்கு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு இணுவில் மஞ்ச உற்சவம் இடம்பெறும்.

அன்பர்கள், அடியார்கள் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுவார்களாக

— தர்மகர்த்தா சபை.

இணுவில் கந்தசுவாமி கோவில். (24318)



உ

# கலைப்பணி ஓங்கட்டும்

அகில இலங்கை இளங்கலைஞர் மன்ற கலாமண்டப திறப்புவிழாச் செய்தி கேட்டு மிக மகிழ்ந்தேன் எங்கிருந்தாலும் நம் சொந்த மண்ணில் நடைபெறும் பெருமைக்குரிய நிகழ்வுகள் நம்மையறியாமல் தம் நெஞ்சை மகிழ்விப்பதோடு, அங்கு நாம் இல்லையே என்ற ஏக்கத்தை கொழுந்து விட்டெரியச் செய்துவிடுகிறது. பசி பட்டினி, பஞ்சம் என அடுத்தடுத்து வரும் துன்பச் செய்திகளுக்கு மத்தியில் கலாமண்டபத் திறப்புவிழாச் செய்தி பாலைவனத்துள் பாய்ந்த பாலாறு போல் பெருமகிழ்வு தருகிறது

தமிழர் தெய்வம் மறவார். செயும் கடன் பிழையார். இவ்விரு இயல்பினாலும் தமிழினம் எதுதான் வருந்தினும், எதுதான் நேரினும் இறுதியில் பெருமையும் இன்பமும் அடையும் என்ற பாரதியின் நம்பிக்கையை எண்ணிப் பார்க்கிறேன். எதுவுமே இல்லாத நிலையில் இசைத் தேவதையின் கலைக்கோயிலாக கலாமண்டபத் திருப்பணியை தலைமேற்கொண்டு பல இன்னல்களையும் தாண்டி ''இன்னிசை வேந்தர்'' திரு. பொன் சுந்தரலிங்கம் நிறைவேற்றி இருப்பதை நண்பர் மகாராஜா சோமசேகரம் மூலம் அறிந்து மிக மகிழ்ந்தேன்.

அங்கு நான் இல்லை எனினும் என்னை மறந்துவிடாமல் இந்த அறப்பணியில் என்னையும் இணைத்து கலாமண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் கலைஞர் பெருமக்களுக்கு அன்னமிட்டுத் தொண்டாற்றும் பெரும்பணியை தந்தமையை நன்றியோடு பாராட்டுகின்றேன்

இளங்கலைஞர் மன்றத்தினரின் அழைப்போடு எம் தனிப்பட்ட அழைப்பையும் கலைஞர்கள் முன் சமர்ப்பித்து இளங்கலைஞர் மன்றத்தினரும் பொன் சுந்தரலிங்கம் அவர்களினதும் கலைப்பணி ஓங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.



இ. திருவாதிரை

''திருப்பதி ஸ்ரோர்ஸ்'' (9/4318)

NEW ENGLISH ACADEMY

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாக பேசி விடுவோமோ என்ற தயக்கம்! இது தானே உங்கள் பிரச்சினை? கவலையை விடுங்கள்.

4 மாதங்களில் தயக்கமின்றி ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க இலகு நடையில் உளவியல் ரீதியாக கற்பிக்கப்படும்.

இன்று ஆரம்பம்: (06 - 02 - 93)
சனி பி. ப. 3 - 00 மணி

குறிப்பு: வாராந்தம் 4 மணித்தியால வகுப்புகள்

ஆசிரியர்: இ. சிவலிங்கம் (Dip - in - English)

தொடர்பு நேரம்: காலை 8 - 30 — 12 - 00
மாலை 3 - 00 — 6 - 00

(20 மாணவர்கள் மட்டும் ஒவ்வொரு பிரிவுகளில் அனுமதிக்கப்படுவார்கள்)

(சி/4221)


## பழனி இடைத்தேர்தல்

சென்னை, பெப். 6

தமிழ்நாட்டில் உள்ள பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும்.

—இவ்வாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது. (அ-எ)

## ஆலயங்களில் இன்று தைப்பூசத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

இந்துக்களின் முக்கிய தினங்களில் ஒன்றான தைப்பூசம் இன்றாகும். தைப்பூசத்துடன் இணைந்த முழுநிலா நாளில் சிவாம்சமான சூரியன் மகர ராசியிலும், சக்தி அம்சமான சந்திரன் கடகராசியிலும் பூமிக்கு இருபுறமும் நேர்க்கோட்டில் நிற்பர். சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனித நாளாகவும் தைப்பூசம் அமைகிறது.

அம்மன் கோவில்களில் தைப்பூசத் திருவிழா பொங்கல், படைகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களிலும் விசேட அபிடேக ஆராதனைகளுடன் திருவிழாக்கள் நடக்கின்றன.

தைப்பூசத்தினத்தில் நாட்காரியங்களை ஆரம்பித்தல், புதிர் எடுத்தல், பெண்பிள்ளைகளுக்கு முக்குக்குத்துதல், வித்தியாரம்பம் செய்தல் போன்ற மங்கள காரியங்கள் செய்யப்படும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயம், நீர்வேலி அருள்மிகு கந்தசாமி கோவில், இணுவில் கந்தசாமி கோவில், கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயம், ஆனைக்கோட்டை சம்பந்த பிள்ளையார் கோவில், ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலயம், தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயம், நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலயம், பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலயம், அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ். பண்ணன்குளம் நாச்சி அம்மன் ஆலயம், வழுக்கம்பரை அம்பாள் ஆலயம், பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவில் ஆகிய ஆலயங்களில் தைபூசத் திருவிழாக்கள் வெகுசிறப்பாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-க-28-87-100-152-51-30)


அழைப்பிதழ்

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் 2 வது ஆண்டு மலர் வெளியீட்டு விழா சங்க தலைவர் என். இராமச்சந்திரன் தலைமையில் இன்று பிற்பகல் 3 மணி அளவில் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். விழாவில் அனைத்து வர்த்தக ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்:
வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்

தலைமை செயலகம்,
237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(24325)



அழைப்பு

தேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். அடைக்கல மாதா கோவிலில் 1993 — 02 — 06 இன்று காலை 7 மணிக்கு இடம் பெறும் திருப்பலிப் பூசையிலும், முற்பகல் 11 மணிக்கு வீட்டில் இடம் பெறும் ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி

அன்புடன்;

மனைவி: திருமதி ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார்,
தாய்: திருமதி இராசலட்சுமி சதாசிவம்,
அண்ணா: திரு. சதாசிவம் காந்திதாசன்,
மற்றும் உறவினர்கள்.

128/6, பலாலி வீதி,
திருநெல்வேலி.

[24309]



BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

A/L 93

கலை, வர்த்தகம்

மீட்டல்களுடன்
வினா - விடை
வகுப்புகள்

பொருளியல்:
உதயன்
வர்த்தகம்:
தேவா, குகன்
கணக்கியல்:
ராஜன்
அளவையியல்:
S. S. மனோகரன்
தமிழ், இந்துநாகரிகம்
பாலா

ஆரம்பம்:
09 — 02 — 1993
செவ். 4-00 P. m.

(சி-4215)


## ஷெல் தாக்கு

சுழிபுரம், பெப். 6

மாதகல் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் சில்லாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் இரவு பலாலி முகாமிலிருந்து தெல்லிப்பழை, கட்டுவன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

(உ-15-28-143-161)

## பத்திரிகைகளுக்கு...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து பத்திரிகைக் காரியாலயங்களுக்கு ''சீல்'' வைக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒன்றாக அந்த அலுவலகங்களுக்குச் சென்று மிரட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''லங்காதீப'', ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைகளை வெளியிடும் ''ரைம்ஸ் குறூப்'' நிறுவனத்துக்கு வழங்கப்படும் சகல அரசாங்க விளம்பரங்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

அரச சார்பற்ற பத்திரிகைகளுக்கு தனியார் நிறுவனங்கள் வழங்கும் விளம்பரங்களும் நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸா—

பல பத்திரிகைகள் தனக்கும் தனது அரசுக்கும் எதிராக வேண்டுமென்றே பொய்ப்பிரசாரம் செய்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

''அந்தப் பத்திரிகைகளுக்கு சரியான பாடம் படிப்பிப்பேன்''— என்று குறிப்பிட்ட அவர், ''இத்தகைய பத்திரிகைகளுக்கு விளம்பரம் வழங்குவதன் மூலம் அரசுக்கு எதிரான கொள்கைகளுக்கு தனியார் நிறுவனங்கள் உதவி வழங்குகின்றன''— என்றும் சொன்னார்.

இவ்வாறு ஜேர்மன் வானொலி தனது கொழும்புச் செய்தியாளரை மேற்கோள் காட்டி அறிவித்தது. (உ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-02-1993 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தும்

வதிவிட வேளாண்மைப் போட்டி - 1992/1993

யாழ். மாவட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தும் 2ஆவது வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விதிகள், நிபந்தனைகள் கடந்த மாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் முறையே ஈழநாடு, உதயன், ஈழநாதம் பத்திரிகைகளில் வெளிவந்தன. இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் முடிவு திகதி 30 - 01 - 1993 என குறிப்பிடப்பட்டுள்ளது. போட்டிகளில் கலந்து கொள்வோரை ஊக்குவிக்கும் முகமாக போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 15 - 02 - 1993 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் பத்திரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்ட கோட்ட செயலகங்களிலும், வட்ட இணைப்பாளர் அலுவலகங்களிலும், கமநலசேவை நிலையங்களிலும் பெற்று இப் போட்டியில் கலந்து உற்பத்திகளை பெருக்கும் அதே வேளையில் அதியுயர்ந்த பரிசில்களையும் பெறுமாறும் வேண்டுகின்றோம்.

பயன் தரும் மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தலும், கால் நடை வளர்ப்பிற்கான பதிவேடுகள் பேணப்படுதலும் புள்ளி வழங்கும் போது முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும்.

வெற்றியீட்டுவோர்க்கான பரிசில் விவரம்:

1. மாவட்ட மட்டம்:
1ஆம் பரிசு புத்தம் புதிய நீர் இறைக்கும்- இயந்திரம் றொபின் 20''
2ஆம் பரிசு - ரூபா 8000/-
3ஆம் பரிசு - ரூபா 6000/-

2. கோட்ட மட்டம்:
1ஆம் பரிசு - ரூபா 5000/-
2ஆம் பரிசு - ரூபா 3500/-
3ஆம் பரிசு - ரூபா 2500/-

3. உதவிஅரசாங்க அதிபர் வட்ட மட்டம்:
1ஆம் பரிசு - ரூபா 2000/-
2ஆம் பரிசு - ரூபா 1500/-
3ஆம் பரிசு - ரூபா 1000/-

மேலும் 100க்கு மேற்பட்ட ரூபா 750/- பெறுமதிமிக்க பல ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

ஆடு, மாடு, முயல், தாரா, கோழி, தேனீ, பயிர்வகை, உற்பத்திபோன்றவற்றில் மட்டும் சிறப்பாக மேற்கொண்டிருப்பின் சிறப்பு பரிசில்களும் வழங்கப்படும்.

தனிதனி பயிர்கள் சிறப்பு உற்பத்தி, பழவகை நாற்றுக்கள், இயற்கை முறை நோய்த்தடுப்பு கையாளுதல், உரிய முறையில் திறம்பட பதிவேடுகள் பேணுதல் போன்றவற்றை தனி, தனியாக செய்பவர்களும் இப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். இதன் மூலம் முதலிடம் பெறுவோர்க்கும் சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.

இப் போட்டிக்கான புள்ளி மதிப்பீடுகள் 10 - 03 - 1993 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

(சி-4346)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தங்கராஜா மனோகரராஜா

(மண்கும்பான் மேற்கு, 5 ஆம் வட்டாரம்)

தோற்றம்: 18 - 06 - 1958
மறைவு: 03 - 01 - 1992

திதி: 06 - 02 - 1993

கண்ணனின் மைந்தனே கருணையின் பிறப்பிடமே
சுமத்தொழிலே கண்ணாகக் காலமெல்லாம் உழைத்தாயே
இராணுவத்தால் இடம்பெயர்ந்து வந்ததால்
இரத்த அழுத்த நோய் பொன்னுடலில் புகுந்ததுவோ
எட்டு நாளில் எமையெல்லாம் விட்டுப் பிரிந்ததுவோ
மணக்கோலம் பார்க்க நாம் நினைத்திருக்கையில்
பிணக்கோலம் காட்டி மறைந்தாயே - இறைவன்
வெள்ளைப் புற்று விநாயகர் தன் பாதத்தில்
விருப்புடனே உம்மை அழைத்தாரோ
ஓராண்டு என்ன நூறு ஆண்டு மறைந்திடினும்
உன் நினைவு நெஞ்சைவிட்டகலாது.

இங்ஙனம்
பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்,
உறவினர்கள்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

(24323)


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

(அச்சுயந்திர தொழில்நுட்ப வல்லுநர்)

வேலுப்பிள்ளை—முத்துக்கிருஷ்ணர் 05-02-1993 இல் காலமானார்.

அன்னார் நேசபூபதியின் அன்புக் கணவரும், அற்புததேவன், புனிதவதி, சிவகுமாரன், பரமானந்தன், லோகேஸ்வரி, தெய்வானைப்பிள்ளை, பூரணசந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரன், தயாபதி, தயாரூபன், காங்கேசன், கேதீசன், யதீசன், சர்மிலா, கோபிகா, தர்சன், அபிரா, அச்சுதன் ஆகியோரின் பேரனும், இராசதுரை, விமலநாதன், விஜயராணி, செல்வராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காளிகோவிலடி, மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு இன்று சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. அற்புததேவன் (மகன்)

காளி கோவிலடி,
மல்லாகம்.

(சி/4349)

### திருமதி விசாலாட்சி அம்பலவாணர்

சரவணையைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவையும், நல்லூரையும் வசிப்பிடமாகவும் கொண்ட விசாலாட்சி 04-02-93 இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற மண்டைதீவு விதானையார் அம்பலவாணரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சௌபாக்கியலட்சுமி, நாகம்மா, சிவகாமசுந்தரி (கமலா), காலஞ்சென்ற ரதிமதி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவஞானசம்பந்தன், நாகேந்திரா, மதுரைநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராதா, கௌரி, ரமணி, கனகேந்திரா, திலகேந்திரா, முருகதாஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று 05-02-93 வெள்ளிக்கிழமை 92, கோவில் வீதி, நல்லூரில் ஈமக்கிரியைகள் செய்யப்பட்டு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கௌரி தில்லைநாதன். (பேத்தி)

நல்லூர்.

(24317)

### சந்திரவர் சிதம்பரப்பிள்ளை

(பொன்னையா மாஸ்ரர்)

அளவெட்டி வடக்கு, கேணிக்கரையைச் சேர்ந்த சந்திரவர் சிதம்பரப்பிள்ளை (பொன்னையா மாஸ்ரர்- முன்னாள் அதிபர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி) நேற்று வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி இராசலக்சுமியின் அன்புக் கணவரும், திருமதிகள் திலகவதி நடராசா (ஆஸ்திரேலியா), மங்கையர்க்கரசி கந்தையா, மங்களேஸ்வரி சிவபாதசுந்தரம், செல்வராணி சபாரத்தினம் (U.K), உமாபதிசிவம் (பொறியியலாளர் — U.K) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான நடராசா (முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதய, மகாஜனா கல்லூரிகள்), டாக்டர் சிவபாதசுந்தரம் (குழந்தை வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), திரு. கந்தையா (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, நெல் சந்தைப்படுத்தும் சபை), திரு. சபாரத்தினம் (U.K), திருமதி சுசித்திரா உமாபதிசிவம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடி ஒடை ஒழுங்கை (இராதா ஒழுங்கை) 37 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்குக் கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
அ. கந்தையா (மருமகன்)

37, இராதா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(24326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org